நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

44—

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

***10953—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தேக்கம்பட்டி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தேக்கம்பட்டி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் நம் அனைவருடைய நெஞ்சங்களிலும் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழும் மனித தெய்வம் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தை திறம்பட ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற அண்ணன் முதலமைச்சர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து ஆட்சிச் சக்கரத்தை சிறப்பாக வழி நடத்திச் சென்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அன்புக்குரிய உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு*

2019 ஜூலை 5]

திரு. வேலுமணி அவர்களுக்கும் எனது பணிவு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட தேக்கம்பட்டி மிகப் பெரிய கிராம ஊராட்சியாகும். அவ்வூராட்சி 2,117 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்டது. ஏறத்தாழ 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு மிகப் பெரிய ஊராட்சி. சுமார் 11,838 வாக்காளர்களைக் கொண்டிருக்கிற ஓர் ஊராட்சி. குறிப்பாக 28 குக்கிராமங்களில் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். 5,675 வீடுகள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. அந்த ஊராட்சி மிகப் பெரிய ஊராட்சியாக இருக்கின்றது. அதற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கின்ற நிருவாகம் பஞ்சாயத்து நிருவாகம். அந்த நிருவாகத்தில் செயலாளராக ஒருவர் உள்ளார். தற்போது பஞ்சாயத்து நிருவாகம்தான் மக்களுடைய அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருக்கிறது. தனிநபர்கள்கூட, 'எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்' என்று தங்கள் கோரிக்கைகளை பஞ்சாயத்து நிருவாகத்திடம்தான் ஒப்படைக்கிறார்கள். பஞ்சாயத்து செயலாளராக இருக்கின்ற ஒருவரால் அந்தப் பணிகளையெல்லாம் வேகமாக செய்து கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, நிருவாக வசதியை ஏற்படுத்துகின்ற வகையில், இவ்வூராட்சியை இரண்டாகப் பிரித்துக் கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியம், தேக்கம்பட்டி ஊராட்சியில் 26 குக்கிராமங்கள் உள்ளன. இவ்வூராட்சியின் மொத்த பரப்பளவு 26.54 சதுர கி.மீ. ஆகும். இவ்வூராட்சியின் மொத்த மக்கள் தொகை 12,414 ஆகும். ஓர் ஊராட்சியை இரண்டாகப் பிரிப்பதற்கு, அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16–3–2007–ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரால் ஊரக வளர்ச்சித் துறை*

இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்படும் கருத்துருவை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் தனது பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தேக்கம்பட்டி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்படும்போது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கடந்த காலத்திலே 4 மாநகராட்சிகள் இருந்தன. இன்றைக்கு நிருவாக வசதிக்காக நகராட்சிகளுடைய எல்லைப் பகுதிகளை விரிவடையச் செய்து, அன்றைக்கு 4 மாநகராட்சிகளாக இருந்தது இன்றைக்கு 15 மாநகராட்சிகளாக எண்ணிக்கையில் உயர்ந்துள்ளது. அந்தவகையிலே இன்றைக்கு நகராட்சிகளெல்லாம் மறுவரையறை செய்யப்பட்டு, 15 மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால், கிராமப் பஞ்சாயத்துகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளெல்லாம் மறுவரையறை செய்யப்படாமல் நீண்ட நெடுநாட்களாக இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, சிறு சிறு ஊராட்சிகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை ஜனத்தொகையாகக் கொண்ட அந்த ஊராட்சிகளை ஒன்றாக இணைக்கவும், 10,000, 15,000 என்று ஜனத்தொகை இருக்கின்ற அந்த ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்கவும், மிகப் பெரிய ஊராட்சிகளாக, பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்றிருக்கிற ஊராட்சிகளாக இருந்தால் அவற்றைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தவும், அந்தப் பேரூராட்சிகளிலே அதிகமான வருமானம் ஈட்டுகிற பேரூராட்சிகளாக இருந்தால் அவற்றை நகராட்சிகளாக விரிவடையச் செய்கின்ற அந்த வரையறைகளையெல்லாம் செய்வோமேயானால், அந்தப் பகுதியிலே அடிப்படைத் தேவைகளையெல்லாம் முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியும்.

2019 ஜூலை 5]

அந்தவகையிலே, இன்றைக்கு தமிழக அரசு ஒரு குழுவை அமைத்து, எந்தெந்த ஊராட்சிகளிலே என்னென்ன நிலைமைகள் என்பதையெல்லாம் கண்டறிந்து அந்தக் கருத்துகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தெரிவிக்கலாம். கண்டறியப்பட்ட நிலைமைகளின் அடிப்படையில், அந்த ஊராட்சிகளைத் தரம் உயர்த்துகின்ற வகையிலே மக்களுடைய கூட்டத்தைக் கூட்டி, அவர்களுடைய கருத்துகளைக் கேட்டறிந்து, அதன் மூலமாக அந்த ஊராட்சிகளையெல்லாம் தரம் உயர்த்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அரசே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்க வகையிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் ஆணையைப் பிறப்பித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, இதுபோன்று கண்டறியப்பட்ட அந்த ஊராட்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுத்து, அவர்களின் கருத்துகளைக் கேட்கின்ற வகையிலே அமையுமேயானால், அனைத்து ஊராட்சிகளையும் விரிவுபடுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இதை அரசு மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தையும், அரசுக்கு நல்ல ஆலோசனையையும் கூறியிருக்கிறார். அந்தக் குழு அமைக்கப்பட வேண்டும் என்றார். அவர் சொல்லிய அந்தக் குழு* already *இருக்கிறது. ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்து, அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16–3–2007–ல் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், அரசுக்கு கருத்துரு அனுப்புவதற்கு முன் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இப்போது நிறைய ஊராட்சிகள்* individual body–*யாக இருக்கின்றன. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊரக*

உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்பு நலச் சங்கங்கள் ஆகியோருடன் முதல் கூட்டத்தை குழுவாக நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாவது கூட்டத்தில் முதல் கூட்டத்தில் பெற்ற கருத்துகளை பரிசீலனை செய்ய வேண்டும். தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் கருத்துகள் தனித்தனியாகக் கேட்கப்படும். மேலும், அரசியல் கட்சிகளின் கோரிக்கைகள் மற்றும் கருத்துகள் கேட்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை, கருத்துரை தயாரிக்கப்பட்டு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும். தேவைப்பட்டால் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மாவட்ட அளவில் மூன்றாவது கூட்டத்தைக் கூட்டி, கருத்துரையின் மீதான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளைத் தெரிவிக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்படும் கருத்துருவை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் தனது பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்ப வேண்டும். அதன் பிறகு, அங்கிருக்கக்கூடிய பேருந்து வசதி, தாலுகா அலுவலகத்திலிருந்து தாலுகாவிற்கு போகக்கூடிய distance இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல், ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளைத் தரம் உயர்த்துவதற்கும் இதே norms–தான். அந்தக் குழுவிடமிருந்து பரிந்துரை வந்தால் கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கையை அரசு கண்டிப்பாக கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வருகிறேன். பொதுவாக நகரத்தினுடைய விரிவாக்கப் பகுதிகளில் extension area–ல் நிறைய புதிய புதிய கட்டடங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நகராட்சியை*

2019 ஜூலை 5]

அடுத்து இருக்கக்கூடிய பகுதி கிராமப் பகுதியாக இருக்கிறது. Extension area *வரும்போது நகரத்திலே இருக்கக்கூடிய வசதிகளை அங்கே செய்து கொடுக்க முடியவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அருப்புக்கோட்டையை சுற்றி, விருதுநகரை சுற்றியெல்லாம்* extension areas *நிறைய வந்துவிட்டன. ஆக, அந்தப் பகுதிகளையெல்லாம் சரி பார்த்து, 15 ஆயிரம் வாக்குகளுக்கு அதிகமாக அல்லது 20 ஆயிரம், 25 ஆயிரம் ஜனத்தொகையுள்ள பகுதிகள் என்று பிரித்து, அவற்றையெல்லாம் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தினால் மட்டும்தான் அந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதியிலிருந்து வாருகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்ய முடியும். அவை கிராமங்களாக இருக்கின்ற நேரத்தில், 15 ஆயிரம் ஜனத்தொகை இருக்கக்கூடிய பகுதிகளுக்கு எங்களால் எந்தவிதமான சலுகைகளையும் செய்ய முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகரத்தை ஒட்டியிருக்கின்ற பகுதிகளில் 15 ஆயிரம் வாக்குகளுக்கு அதிகமாக இருக்கின்ற பகுதிகளையெல்லாம் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துகின்ற அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று சொன்னால், எதிர்காலத்திலே அந்தப் பகுதிக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் செய்ய முடியும். எனவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கை, பேரூராட்சிகள், அதேபோல நகராட்சிகளையெல்லாம் மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தும்போது அருகில் இருக்கக்கூடிய ஊராட்சிகளை இணைத்துதான் நாம் தரம் உயர்த்துகின்றோம். சென்னை மிகப் பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டபோது அருகில் இருக்கக்கூடிய ஊராட்சிகளெல்லாம் இணைக்கப்பட்டன. இன்றைக்கு பேரூராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டால் முழுவதும் நம்முடைய* fund*–தான். ஆனால், ஊராட்சிகளில் பல்வேறு சலுகைகள் கிடைக்கின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஊராட்சியில் மட்டும்தான் இருக்கின்றது.*

அதேபோல பாரதப் பிரதமர் வீடு கட்டும் திட்டம், இதற்கு முன் பார்த்தீர்களென்றால் இந்திரா குடியிருப்புத் திட்டம் என்றிருந்தது. இன்றைக்கு பாரதப் பிரதமர் வீடு கட்டும் திட்டம் என்றிருக்கிறது. இப்படி பல்வேறு சலுகைகள் மத்திய அரசாங்கத்திடமிருந்து ஊராட்சிகளுக்கு அதிகமாகக் கிடைக்கின்றன. பேரூராட்சிகளுக்கு முழுவதும் நம்முடைய fund–தான். நம்முடைய அரசினுடைய fund–தான். ஆக அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அதேபோல விதிமுறைகள் இருக்கின்றன. என்னென்ன விவரங்களை எடுத்து அனுப்ப வேண்டுமென்று விதிமுறைகள் முழுவதையும் நான் வரிசையாகச் சொன்னேன். இப்படி பரிந்துரைகள் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கோரிக்கையையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை சிறப்பாக வழி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக வீற்றிருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பர்கூர் ஊராட்சி என்பது மலைப் பகுதியாகும். மலைப் பகுதியாக இருக்கின்ற பர்கூர் ஊராட்சி அதிக நிலப்பரப்பைக் கொண்டு, அதிக மக்கள்தொகையைக் கொண்டுள்ள பகுதியாகும். இந்தப் பகுதியில் சுமார் 20,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். பர்கூர் ஊராட்சியை நிருவாக ரீதியில் பிரிக்க வேண்டும் என்ற அவர்களின் நீண்டநாள் கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே ஆய்வுக் கூட்டம், கருத்துக் கூட்டம் நடத்தப்பட்டு, கருத்துகள் கேட்கப்பட்டு, அதை அரசுக்கும் அனுப்பி வைக்கப் போவதாகத் தெரிகின்றது. பர்கூர் ஊராட்சியினுடைய கடைக்கோடியில்

இருக்கின்ற கிழக்கு மலை என்று சொல்லக்கூடிய மடத்திலிருந்து பர்கூர் செல்வதற்கு 25 கிலோ மீட்டர் ஆகின்றது. அதேபோல மேற்கு மலை என்று சொல்லக்கூடிய கொங்காடை பகுதியிலிருந்து பர்கூர் செல்ல 25 கிலோ மீட்டருக்கு மேலாகின்றது. இதனால் பொதுமக்களுக்கும் மற்றும் அரசு நிருவாகத்திற்கும் சிரமமாக உள்ளதால், பொதுமக்களினுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற உள்ளாட்சித் துறையை சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துக் கூட்டம் நடத்தியிருப்பதால் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், அரசாணை எண் 176, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 9—12—2013—ல் தருமபுரி மாவட்டத்திலுள்ள பெண்ணாகரம் மற்றும் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, புதிதாக ஏரியூர் மற்றும் கடத்தூர் என்ற இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்களைத் துவக்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அரசாணை எண் 97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 5—8—2016—ன்படி, கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தைத் துவக்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த 3 புதிய ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளாட்சித் தேர்தலுக்குமுன் செயல்படத் துவங்கும்.

அதேபோல, கிருஷ்ணகிரி, நீலகிரி, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, புதிதாக 7 ஊராட்சி ஒன்றியங்களாக அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஊராட்சி குறித்து,

மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு பரிந்துரை அனுப்பியிருந்தால் கண்டிப்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

45—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

***12394—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான கடையநல்லூரிலே நீதிமன்றம் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தாலுகா அறிவிக்கப்பட்டு, 5 வருடங்கள் ஆகப் போகின்றன. ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு நீதிமன்றம் அமைக்கலாம் என்ற ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதாக நான் அறிகின்றேன். கடையநல்லூர் தாலுகாவை பொறுத்தவரை, 2 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள்,